இருக்கிறது. அங்கே ஏற்கெனவே ரிட்ரென்ஜ்மென்ட் என்ற அடிப்படையில் அவர்களை பணி ஓய்வு செய்யவேண்டிய நிர்ப்பந்தம் இருக்கின்ற காரணத்தால் அதிக அளவில் அங்கே பணியாளர்கள் இருக்கின்ற காரணத்தால் அதை மறுபரிசீலனை செய்ய இயலாது. மேலும் நாம் புதிதாக நியமனம் செய்யப்போவதில்லை. மற்ற நிறுவனங்களில் 18 ப்ளஸ் 1 என்ற அந்த 19 சதவீதம் ஏற்கெனவே நிரப்பி இருக்கிறோம். எனவே எல்லா நிறுவனங்களிலும் ஏற்கெனவே இருக்கிற முறைப்படி அவர்களுக்குள்ள உரிமைகளைப் பாதுகாக்க இந்த அரசு என்றும் தவறியதே இல்லை. ஆகவே ஒரு குழு அமைக்கவேண்டிய அவசியம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 151, திரு. வி.ரவிச்சந்திரன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

151—

உயர்நிலைப் பள்ளிகளில் வேளாண்மைக் கல்வியை பாடத் திட்டமாக்குதல்.

** 25449* - திரு வி. ரவிச்சந்திரன்:

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உயர்நிலைப் பள்ளிகளில் வேளாண்மைக் கல்வியை பாடத் திட்டத்தில் சேர்க்க பரிந்துரை செய்ய அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்த கல்வியாண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) வேளாண்மை கல்வியை பாடத்திட்டத்தில் சேர்ப்பது குறித்து அமைக்கப்பட்ட குழு இடைக்கால அறிக்கை கொடுத்துள்ளது. இறுதி அறிக்கை பெறப்பட்டபின், உயர்நிலைப் பள்ளிகளில் வேளாண்மைக் கல்வியை பாடத்திட்டத்தில் சேர்ப்பது குறித்து அரசு முடிவு எடுக்கும்.

திரு. வி. ரவிச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் நல்லாட்சியில் மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் ஆம் என்றதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். உயர்நிலைப்பள்ளிகளில் வேளாண்மைக் கல்வி பாடத்திட்டத்தில் எந்தக் கல்வியாண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப.கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய முதலமைச்சர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பள்ளிகளில் வேளாண்மைப் பாடத்திட்டத்தைச் சேர்க்கவேண்டும், அதற்குரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பணித்ததற்கு பின்னால் இந்தத் துறை 21-4-1992—-ல் ஒரு குழு அமைத்து, அந்தக் குழுவின் அறிக்கையைப் பெற அவர்கள் ஆணை வழங்கினார்கள். அந்தக் குழு 9 மற்றும் 10 ஆம் வகுப்புகளில் வேளாண்மையைப் பாடமாகக் கொண்டு வரலாம் எனவும், 7 மற்றும் 8 ஆம் வகுப்புகளில் தமிழ், சரித்திரம், சமூகப் பாடங்களில் வேளாண்மை சார்ந்த பாடங்களாகச் சேர்க்கலாம் என்றும் 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் வேளாண்மைப் பாடம் ஏற்கனவே வாழ்க்கைத் தொழில் கல்விப் பாடமாக இருப்பதால் தனியாக இதைச் சேர்க்கத் தேவையில்லை என்றும் தன்னுடைய அறிக்கையைத் தந்திருக்கிறது. பள்ளிக் கல்விப்பாடத் திட்டங்கள் குறித்து டாக்டர் மால்கம் ஆதிசேஷையா தலைமையில் அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழுவின் பள்ளிக் கல்விப் பாடத்திட்டங்கள் திருத்தியமைப்புக் குழு செய்த பரிந்துரை அடிப்படையில் தற்போது பாடத்திட்டங்கள் 1988-89 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டன. இந்த பாடத்திட்டங்கள் ஐந்தாண்டுகளுக்கு பள்ளிகளில் பயன்படுத்தலாம் என அரசு முடிவு செய்துள்ளது. எனவே இந்த ஆண்டு அந்த பாடத் திட்டங்களுடைய குழு பரிந்துரை நிறைவுறுகின்ற காலத்தை இழக்கின்ற காரணத்தினால் புதிய பாடத் திட்டத்தினுடைய குழு அமைக்கப்பட்டவுடன் அந்த குழுவோடு வேளாண்மைத் துறையின் சார்பாக அமைக்கப்பட்ட குழுவும் கலந்து முடிவெடுத்து நல்லதொரு முடிவினை எடுக்க இருக்கிறார்கள். ஏற்கனவே இது குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களிடத்திலே நான் கலந்து பேசியிருக்கிறேன். அவர்களும் இசைவைத் தந்திருக்கிறார்கள். வெகு விரைவில் இப்பாடத் திட்டங்கள் பள்ளிகளில் அமைக்கப்படும் என்பதனைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10.55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த வினா. (குறுக்கீடு) உங்களுடைய கேள்விக்குப் பதில் வந்துவிட்டதே. திரு .வி. ரவிச்சந்திரன்.

திரு. வி. ரவிச்சந்திரன: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த பாடத்திட்டத்தினை எடுத்துவருவதற்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் தென்னைமரத்தை தாக்கும் காண்டாமிருக வண்டு, கருத்தபுழு வண்டு, சிவப்புப் புழு வண்டு..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தனிக் கேள்வி போடவும், வினா எண். 152, திரு. தா. செழியன், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.